உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௧௮] ரௌத்திரி-ஹூ ஆவணி மீ [பகுதி ௧௦.

Vol. XVIII. August—September-1920. No. 10.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 18, 19-ஆம் வருஷக் கூட்டம்.

### முதல்நாள் நடவடிக்கை.

கடந்த செப்டம்பர் மீ 4, 5உகளில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 18, 19-ஆம் வருஷக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு, தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியும், இராமநாதபுரம் ஸம்ஸ்தானாதிபதியும், பெருவள்ளலுமான மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி மன்னரவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ B. ராஜாராமபாண்டியன் அவர்கள், மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள், திருநெல்வேலி ஸ்ரீமான் N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், ஸேது ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீமத்—ரா. இராகவையங்காரவர்கள், ஸ்ரீமத்—T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., ஸ்ரீமத், S. பால்வண்ணமுதலியாரவர்கள், ஸ்ரீமத்,—V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B.A., B.L., ஸ்ரீமத்—A. R. கிருஷ்ணமாசாரியரவர்கள் M.A., ஸ்ரீமத்-T. இராமாநுஜ ஐயங்காரவர்கள், ஸ்ரீமத்-V. முத்து ஸாமிஐயரவர்கள் M.A., L.T., ஸ்ரீமத்—சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், ஸ்ரீமத்—திருநாராயணையங்கார் அவர்கள், தஞ்சை ஸ்ரீமத்—இராஜகோபாலையங்காரவர்கள், ஸ்ரீமத்—R. S. நாராயணஸாமி ஐயரவர்கள் B.A., B.L., ஸ்ரீமத்-ஆர். கணபதிஐயரவர்கள் B.A. B.L. ஸ்ரீமத்—N R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், ஸ்ரீமத்-ஆ. கார்மேகக்கோனாரவர்கள், ஸ்ரீமத்-அரங்கநாத சாஸ்திரியவர்கள், ஸ்ரீமத்-T. சுதர்சநாசாரியரவர்கள், ஸ்ரீமத்-M. N. சேஷையரவர்கள், ஸ்ரீமத்-P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள், ஸ்ரீமத்—M. கோபாலகிருஷ்ணையரவர்கள்,

ஸ்ரீமத்—N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள், முதலிய பலர் விஜயம் செய்திருந்தனர். அப்போது சங்கத்தின் அங்கத்தினரில் ஒருவரும், திருநெல்வேலி ஹைகோர்ட்டுவக்கீலும் தமிழபிமானியுமாகிய ஸ்ரீமான்—N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் B.A., B.L., சங்கத்தார் வேண்டுகோட்கு இணங்கி அக்கிராசனம் வகித்தார்கள். முதலிற் கடவுள்வாழ்த்து நடைபெற்றது. பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீமத்— சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், தமிழ்ச்சங்கக் கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத்-சு. நல்லசிவன் பிள்ளையவர்களும், இயற்றிய மங்களவாழ்த்துச் செய்யுட்கள் படிக்கப்பட்டன. பின்னர், காரியதரிசியவர்கள், வருஷக்கூட்டத்துக்கு வரமுடியாத அங்கத்தினரிடமிருந்தும், அபிமானிகளிடமிருந்தும்வந்த தந்திகளையும், கடிதங்களையும், அறிக்கைப்பத்திரத்தையும், அதனொடுசேர வேண்டிய அனுபந்தத்தையும் படித்தார்கள். அதன்பின் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ-உ. வே. சாமிநாதையரவர்களும், மதுரையிலுள்ள இராமேஸ்வரம் தேவஸ்தானபாடசாலைத்தலைவர் ஸ்ரீமத்—A. R. கிருஷ்ணமாசாரியர் M.A., அவர்களும், மதுரை வக்கீல் ஸ்ரீமத்—சுப்பராய ஐயரவர்களும், மதுரை அமெரிக்கன்காலேஜ் புரொபஸர் பீடர் ஐஸாக் அவர்களும், தஞ்சை ஸ்ரீமத்—ராஜகோபாலையங்கார் அவர்களும், திருநெல்வேலி ஸ்ரீமத்—S. பால்வண்ணமுதலியாரவர்களும், ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத்—ரா. இராகவையங்காரவர்களும், சுந்தரபாண்டிய ஓதுவாரவர்களும், இவ்வருஷத்திற் சங்கம் செய்துள்ள வேலைகளைப்புகழ்ந்தும், இதற்கேற்பட்ட நிலைபத்தை யுத்தேசித்திரங்கியும், சங்கத்தை நன்னிலைக்குக்கொண்டுவர வழிகூறியும், தத்தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். அதன்பின் ஸ்ரீமத்: ஜெ. என். இராமநாதன் அவர்கள் தமிழ்மக்களுள் ஆரியரைப் புறக்கணித்துச் சிலர்க்கு வெறுப்புண்டாகப் பேசியதுகண்டு, ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்: ரா. இராகவையங்காரவர்கள் தக்க மேற்கோள்களுடன், ஆரியர் தமிழராற் புறக்கணிக்கத்தக்கவரல்லரென்று நிரூபித்துச் சபையோர் புகழ்ந்துகளிக்கும்படி மறுத்துரைத்தார்கள். பின்னர் அக்கிராசனரவர்கள் சங்கப் பரீக்ஷையிற்றேறிய மாணவர்க்குப் பரிசுமுதலிய அளித்துச் சுருக்கமாகவும், உருக்கமாகவும் விளக்கமாகவும், தமதுபிரசங்கத்தை முடித்தார்கள். அதன்மேல் மங்களவாழ்த்தும் கடவுள்வாழ்த்தும் பாடப்பெற்றன.

பின்னர், சங்கத்தார் சபாநாயகர் முதலியோர்க்கு வந்தனமளிக்க, அன்று சபை இனிது நிறைவேறியது.

இவ்வருடம், தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களாகிய இராமநாதபுரம்ராஜா மாட்சிமைதங்கிய B. இராஜராஜேஸ்வர ஸேதுபதியவர்கள் சங்கத்துக்கு மாளிகைவாங்கும்பொருட்டு முன்னமே வாக்களித்திருந்த ரூபா பதினாயிரமும் ஒருசேரக் கொடுத்துதவியிருப்பதுடன் சங்கம் நடைபெற்றுவந்த வாடகைக்கட்டடத்தை அதற்கே சொந்தமாக வாங்கியதற்கு வேண்டியிருந்த பெருந்தொகையானபொருள் கடன்கொடுத்துதவியதற்கும், தமிழுலகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

அநுபந்தத்திற் கண்டபடி இவ்வருடம் சங்கத்துக்கு எதிர்பாராது நேர்ந்த விபத்தினாலுண்டாகிய நஷ்டங்களைத் தீர்த்துச் சங்கத்தை முன்னிலும் நன்னிலைக்குக்கொண்டுவரவேண்டிச் சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்கள் செய்துவரும் அரும்பெருமுயற்சிகண்டு அது பயனடையும்படி பொருளுதவிசெய்துவருபவர்களது தமிழபிமானம் பாராட்டற்பாலது.

---

## இரண்டாநாள் நடவடிக்கை.

5—9—20 காலை 9-மணிக்குச் சபைகூடியது. முதலில் ஸ்ரீமத்: சீதாராமசாஸ்திரிகள் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். பின் காரியதரிசியவர்கள் கொண்டாட்டத்துக்கு வரமுடியாதவர்களிடமிருந்து வந்த கடிதத்தையும், தந்தியையும், படித்தார்கள். அதன்மேல் பூண்டி அரங்கநாதசாஸ்திரிகளால் கந்தபுராணத்திலிருந்து வள்ளியம்மை திருமணம் என்னும் விஷயம் பிரசங்கிக்கப்பட்டது.

அதன்பின் சங்கக்கலாசாலையிற் கல்விபயின்றவரும், இப்பொழுது மதுரை அமெரிக்கன்காலேஜில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருப்பவருமான ஸ்ரீமத்—ஆ. கார்மேகக்கோனாரவர்கள் தாமெழுதியுள்ள மலைபடுகடாம் ஆராய்ச்சியிலிருந்து இடையிடையே மலைபடுகடாத்தின்சிறப்பும், ஆசிரியரது சிறப்பும், அவரது ஊரும் பிறவும் இன்னவென்றும், "வாதிகையன்னகவைக்கதிர்" என்பதனால் ஆசிரியர் கிருஷித்தொழில் பயின்

றவரென்று தெரிகின்றதென்றும், இந்நூல் 60 உவமையணியுடைய தென்றும், பிற அணிகள் இதிற் காணக்கிடையாவென்றும், இதில் வடமொழிகள் அதிகமாகக் கலக்கப்படவில்லையென்றும், நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

பின்னர், ஸேது ஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்: ரா. இராகவையங்காரவர்கள் ஷை ஆராய்ச்சியை ஒட்டிப்பேசுகையில் தமிழர் பூமிசாஸ்திரப்பயிற்சியுடையவரென்றும், இயற்கைவனப்பை வியக்கக்கூறும் திறமுடையவரென்றும், "தீயினன்னவொன்செங்காந்த" ளென்பது ஆநந்தக்குற்றமென்பதில் "நன்னன் என்ற சொல்லையடுத்து எப்படியாயினும் தீயென்றசொல் வருதல் கூடாது; வந்தால் அது ஆநந்தக்குற்றம்" என்பது ஆளவந்தபிள்ளையாசிரியர்கருத்தென்றும், ஆசிரியர் பெருங்குன்றூர்கிழார் அந்நூலாராதலால் தீ என்ற சொல்லை மங்களவாசகமென்று கொண்டாராதலால் அவர்கருத்துப்படி அது குற்றமன்றென்றும் நன்கு விளக்கிக்காட்டினார்கள். இவை எல்லாராலும் போற்றிக்கொள்ளத்தக்கன. பின் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் கோனாரவர்களது ஆராய்ச்சியை யுவந்து கூறினார்கள்.

அதன்பின் மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனரும், திருச்சி நேஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத். M. கோபாலகிருஷ்ணையரவர்கள் ஒரு வாழ்த்துச்செய்யுளைச் சொல்லிப் பொருளுரைத்தார்கள்.

அதன்பின் ஸ்ரீமத்—V. முத்துஸாமிஐயரவர்கள் M. A. L. T. தமிழ்மொழியும் ஒற்றுமையும் என்ற விஷயத்தை எடுத்துப் பல மத நூல்களிலிருந்து ஆதாரங்காட்டி விளக்கியுரைத்தார்கள்.

பின் அக்கிராசனரவர்கள் உபந்யாசங்களைப்பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தக்கவாறு தமதபிப்பிராயத்தைச் சொல்லக் கடவுள் வாழ்த்துடன் காலைநடவடிக்கை நிறைவெய்தியது.

அன்று மாலை 4-மணிக்கு ஸ்ரீமத்:—சீதாராமசாஸ்திரிகள் கடவுள் வாழ்த்துக்கூற மறுபடியும் சபைகூடியது.

முதலில் மதுரை சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்—சிதம்பர புன்னைவனநாதமுதலியாரவர்கள்

"தமிழ்மொழிபேணல்" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷை தனித்தமிழ்ப்பரீக்ஷை முறைகளையும் சங்கக்கலாசாலையையும் திருத்தியமைத்தல், அப்பரீக்ஷைகளுக்குரிய பாடபுத்தகங்களை மாற்றியமைத்தல், சங்கத்துக்கு நிதிசேகரித்தல், சங்கத்தார் தினசரிநடைபெறும் தமிழ்ப்பத்திரிகையொன்றை ஏற்படுத்தி நடத்தவேண்டிய அவசியம், தக்க வித்வான்களைக்கொண்டு அயலிடங்களில் உபந்யசிக்கச்செய்து தமிழ்ப்பயிற்சியையும் தமிழபிமானத்தையும் வளர்க்கவேண்டிய அவசியம், சங்கவித்வான்களும் பிறரும், ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து அச்சிடவேண்டிய அவசியம், அங்கத்தினர் செந்தமிழ் முதலிய சங்கப்பிரசுரங்களை ஆதரிக்கவேண்டிய அவசியம் என்று பலவிஷயங்களை வற்புறுத்திப் பேசினார்கள்.

பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்கள் ஷ உபந்யாசத்தைப்பற்றி, சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள தனித்தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைமுறைகளையும் சங்கக்கலாசாலையையும் தக்க வித்வான்களைக்கொண்டு திருத்தியாயிற்றென்றும், அப்பரீக்ஷைப் பாடபுத்தகங்களும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டனவென்றும், சங்கத்தார் தமிழிற் றினசரி நடைபெறும் சமாசாரப்பத்திரிகையொன்றை ஏற்படுத்தி நடத்துதல் பல காரணங்களால் இப்பொழுது இயலாதென்றும், நிதிசேகரித்தல் வடுகளைப் பரிசோதித்து அச்சிடுதல் இரண்டிலும் யார் யார் எவ்வளவு உதவிசெய்தபோதிலும் சங்கத்தார் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், அங்கத்தினர் செந்தமிழ்முதலிய சங்கப்பிரசுரங்களை யாதரிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி அவர்கள் கூறியதே தமக்குங்கருத்தென்றும் விடையளித்தார்கள்.

பின்னர், மதுரை வக்கீல் ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸாமி ஐயரவர்கள் B.A., B.L., பாஷாபிமானம் என்பதைப்பற்றித் தாம் எழுதிய வியாசத்தைப் படித்தார்கள்.

அதன்பின், மதுரைவக்கீலும், வருணாச்சிரமதர்மசபைக் காரியதரிசியுமான ஸ்ரீமத்-ஆர். கணபதி ஐயரவர்கள் B.A., B.L., பாஷாதத்துவமும் சொல்வீரலாறும் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு இதில் ஆங்கிலேயர்க்கு அதிகப்பழக்கமில்லையென்றும், நமக்கு அதிகப்பழக்கமுண்டென்றும், நாம் அப்பழக்கத்தைக் கைசோரவிடாது அபிவிருத்தி

செய்யவேண்டுமென்றும், தக்க ஆதாரங்காட்டி விளக்கியதோடு ஸ்ரீமான்-P. மாணிக்கநாயக்கரவர்களது பாஷாதத்துவ ஆராய்ச்சியை மறுத்தும் பேசினார்கள்;

அதன்பின், தமிழ்ச்சங்கக்கலாசாலை யாசிரியர் ஸ்ரீமத்-சு. ஹரிஹரையரவர்கள் தேவாரப்பாக்கள்பாட மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் சபையோர் வேண்டுகோட்கிணங்கி, *பெருங்கதையைப்பற்றி யுபந்யசித்தார்கள். அதில், பெருங்கதையென்பது பிருஹத்கதையின் மொழிபெயர்ப்பென்றும், அது, வத்ஸராஜன் அல்லது உதயணன் என்பவனது சரிதத்தைச் சொல்வதென்றும், இது முதலில், குணாட்டியர் என்பவரால் பைசாசபாஷையில் ஏழுலக்ஷம் கிரந்தமுடையதாக எழுதப்பட்டதென்றும், அதில் ஒருலக்ஷம்கிரந்தம் வடநாட்டில் வழங்கிவந்தது என்றும் வடமொழியிலும் பெருங்கதையென்ப தொன்றுண்டென்றும், அதைப் பின்பற்றி, பிரகத்கதாமஞ்சரி, பிரகத்கதாசாகரம் என்பவை எழுந்தனவென்றும், தமிழ்ப்பெருங்கதை ஜைனநூலென்றும், அது, கொங்குவேண்மாக்கதை, கதை, உதயணன்கதை எனவும் வழங்கப்பட்டதென்றும், அதை இயற்றியவர்பெயர் புலப்படவில்லையென்றும், †சிலப்பதிகாரத்தும், ‡இலக்கணக்கொத்திலும் இந் நூலைப்பற்றிய குறிப்புகள் உண்டென்றும், திருநெல்வேலி மேற்குரதவீதி ஈசுரமூர்த்திக் கவிராயரவர்கள் வீட்டிலும், திருப்பாற்கடனாதகவிராயரவர்கள்வீட்டிலும் இந்நூலின் எட்டுச்சுவடிகள் தமக்குக் கிடைத்தனவென்றும், சிந்தாமணியுரை முதலியவற்றிற் சில மாறுனவை என்பதை இந்நூல்மூலமும் குறிப்பும் விளக்குமென்றும், இந் நூலில் வாத்தியம், அரசு, அமைச்சு முதலியவற்றின் இலக்கணங்களும், ஐந்திணைவளம் முதலியனவும் நன்கு விரித்துக் கூறப்பட்டிருக்கின்றனவென்றும், இந் நூல் 60-அடிமுதல் 300-அடிவரையுள்ள அகவற்பாக்களால் அந்தாதித்தொடையாக இயற்றப்பட்டதென்றும், எல்லாச்செய்யுள்களும் என் என்றே முடிகின்றனவென்றும், இந் நூலின் நாயகனான உதயணன் வீணைவாசிப்பதிலும், யுத்தத்திலும், மந்திரசாஸ்திரப்பயிற்சியிலும் சிறந்தவனென்றும், இவன்,

---

* இந் நூல் ஐயரவர்களால் அச்சிடப்பெற்றுவருகிறது. கூடிய விரைவில் வெளிவரும்.

† உரைப்பாயிரம். பக்கம்-2,3.

‡ பாயிரவுரை.

இயந்திரவாவி, செய்குன்று, நாழிகையறிகருவி, முதலிய ஏற்படுத்தியிருந்தான் என்றும், இவன், தன் மனைவியின்விருப்பத்தை நிறைவேற்ற ஆகாயக்கப்பல் இயற்றியதாய்த் தெரிகிறதென்றும், அக்காலத்து மோட்டாரும், கடிகாரமும் இருந்தனவென்றும், அக்காலத்தவர் சிறந்த அலங்காரமறிந்தவர்களாயிருந்தார்கள் என்றும் கூறி இந் நூலில் ஒருபாகத்தே வந்துள்ள நதிவருணனையைப் படித்துக்காட்டி, பலநாள் வருந்தித்தேடி ஆராய்ந்து பெரியோர்களிடம் கேட்டறியவேண்டிய விஷயங்களை எளிதில் யாருமறிந்து வியப்புறும்படி வெளியிட்டார்கள்.

அதன்பின், ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்கள் ஸபையோர்களின் வேண்டுகோட்கிணங்கி, "தமிழாராய்ச்சி" என்ற விஷயமேற்கொண்டு, முதலிற் கம்பராமாயண நாட்டுப்படலத்து இருபத்தொன்றும்செய்யுளில் இரண்டாமடி "குறிகளும் போற்றிக்கொள்வார் கோன்றநெற்குவைகள்செய்வார்" என்றிருப்பது பொருட்பொருத்தமின்றியும் சிறப்பின்றியுமிருத்தலால் அதனை, "குறிகொளும்போத்திற் கொல்வார்கொன்றநெற்குவைகள்செய்வார்" என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஏடுகளிலும் அப்படியேயிருக்கிறதென்றும், அவ்வாறு பாடங்கொள்ளுமிடத்து, குறி - அடையாளம், போத்து - கடா, கொல்லல் - மிதிக்கச்செய்தல், குவைசெய்தல் - பொலியிடுதல் என்று பொருள்படுமென்றும், அவற்றுள், இங்கு, குறி - கடாவுடையான் அது விரைந்து செல்லுதற்கும் மந்தமாகச்செல்லுதற்கும், நிற்றற்குங் கூறுங் குறிப்புமொழி என்றும், பல தமிழ்நூற்பிரயோகங்களால் நன்குவிளக்கியும், ஆற்றுப்படலத்து இறுதியிலுள்ள "தாதுகுசோலை" என்னும் முதற்குறிப்புள்ள செய்யுளுக்குப் பொருளிதுவென்று நிரூபித்தும்,பின்னர்ப் பழந்தமிழ்மக்களின் நாகரிகமுதிர்ச்சியைவிளக்கத்தொடங்கி,தற்காலத்து மக்கள் ஆபரணமிகத்தரித்தலை நாகரிகமென்று மதிப்பதுபோலமுன்காலத்தவர் மதியாது ஆபரணுதிகளால் ஆடம்பரவேடங்கொள்ளாதிருத்தலே நாகரிகமென்று கருதினரென்பதை, "சில்கலனணிந்தமெல்லென்யாக்கையர்" "அணிபறித்தழகுசெய்புமணங்கு" என்ற நூற்பிரயோகங்கள் கொண்டும், "அழகினுக்கிட்டசட்டை அணைக்கைக்குவிரோதமாகும்" என்ற பூர்வாசார்யர்களின் வாய்மொழிகொண்டும் இனிது நிரூபித்தும், பின், ஊசிமுறி என்பதை விளக்கத்தொடங்கி, ஊசியென்பது எழுத்தாணியையும், ஊசியையும் உணர்த்துமென்றும், அது இங்கு எழுத்தாணியை உணர்த்திற்றென்றும், திருநீலகண்டயாழ்ப்பாணரால் யாழிலிட்டு

வாசிக்கமுடியாதபடி திருஞானசம்பந்தாருளிச்செய்த தேவாரப்பதிக மொன்றுக்கு, யாழ்முரி என்று பெயரானதுபோலத் தம்மோடு வாதுக்கு வந்த புலவர் எழுத்தாணிகொண்டு எழுதமுடியாதபடி இடைக்காடர் செய்த நூலுக்கு ஊசிமுரி என்று பெயராயிற்றென்றும், அந்நூல் நாற் பத்தொன்பது செய்யுளுடையது என்றும், இடைக்காடரும் மற்றொரு புலவரும் தம்முள் மாறுபட்டு இடைக்காடர் செய்யுள்செய்தபொழுது அதனை அவரோடுமாறுபட்டபுலவர் ஓலையில்எழுதிவருமிடத்து யாரேனு மொருவர் தம் செயலைச் செய்யமுடியாது பின்னிடுவராயின் அவரே தோற்றவராவரென்று சூளுறவுசெய்து, இடைக்காடர்,

"ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கையிருந்து ... கெனக்—காக்கைதனை
எய்யக்கோ லில்லாமல் ... என்றனே
வையக்கோ னன்றன் மகன்"

என்பதுபோன்ற செய்யுள்களைச் செய்துவர இச்செய்யுளின் இரண்டு மூன்றாமடியிலுள்ள ஒலிக்குறிப்பையும், அதுபோலும் பிறவற் றையும், இடைக்காடரோடு மாறுபட்ட புலவர் எழுதமாட்டாது பின் னிட்டமையால் இடைக்காடரே வெற்றிகொண்டனரென்றும், கூறிப் பின்பு, யானை நூல், கைந்நிலை என இரண்டு நூல்களுளவென்றும், அவற் றுள், யானை நூல் அதிவீரராமபாண்டியனால் இயற்றப்பட்டதென்றும், அது யானைகளின் இலக்கணங்களையும், அவற்றுக்குவரும் நோய்களையும், அவற்றை நீக்குமுறைகளையும் பிறவற்றையும் விளக்கிக்கூறுவதென்றும், கைந்நிலையென்பது பதினெண்கீழ்க்கணக்கினுட் சேர்ந்ததென்றும், அதற்கு ஒழுக்கநிலையென்பது பொருளென்றும், முற்காலத்தில் செல்வ ரோடு வறியரோடு வாசியற எல்லாரும் தமிழ்ப்புலவர்களை யாதரித்து வந்தனரென்று கூறித் திரிபுவனையென்னும் ஊரார் "குலோத்துங்க சரிதை" என்ற நூல்செய்தமைக்காக, கவிகுமுதசந்திரன் என்ற பட்ட னுக்கு இரண்டுவேலிநிலம் தானம்செய்த சாசனத்தை யாதாரங்காட்டி விளக்கியும், அதுபோல் இப்பொழுதும் தமிழ்ப்புலவர்களை எல்லாரும் ஆதரித்துவரவேண்டுமென்று வற்புறுத்தியும், பல அரிய விஷயங்களை எல்லாரு மெளிதினுணருமாறு உபந்யசித்தார்கள்,

அதன்பின் காலமதிகரித்துவிட்டமையால் அக்கிராசனாவர்கள் தமது முடிவுரையைச்சுருக்கி நடந்த உபந்யாசங்களிலுள்ள நயத்தையும், தமிழின் பெருமையையும், தமிழ்ப்புலவர் பெருமையையும், தமிழை அபிவிருத்திசெய்யவேண்டிய விஷயத்தில் புலவரும் பிறரும் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும், சுருக்கமாகவும், அழகாகவும், தெளிவாகவும் கூறிமுடித்தார்கள்.

அதன்பின் சங்கமகாஜனசபை நடைபெற்றது. அதிற் செய்யப்பட்ட தீர்மானங்களும் பிறவும் இதன் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. பின்னர், புலவர்கள் மங்களவாழ்த்துக்கூறினர். அக்கிராசனாதிபதியவர்களுக்கும் சபையோர்க்கும் சங்கத்தார் வந்தனோபசாரங்கூறி ஹாரசந்தன தாம்பூலாதிகள்வழங்க இரவு 10½-மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது. சுபம்!

"சங்கநிதிசங்கநிதியாய்த்தழைக்கவுல
கெங்குந்தமிழினிசைபரவச்—சங்கமொளிர்
சேதுபதிராஜராஜேசன்சிறக்கவரு
மாதிபகவனருள்,

உதவிப்பத்திராதிபர்.

---

௨

# மங்களவாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 18, 19-ம் வருடக்கொண்டாட்டத்தில்,
நூற்பரிசோதகரும், திருவாவடுதுறையாதீனவித்துவானுமான
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்க ளியற்றியது,

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகமெலாங்காக்கின்றமாதேவனருளாலவ்வுலகினுக்கு
நலமிலங்குகண்போன்மூன்றுதவியசெந்தமிழ்மொழிபன்னாட்டிலென்றுங்
குலவுறத்தென்மதுரைநகர்வந்தபாண்டித்துரையெங்கோமான்வைத்த
நிலவுபுகழ்மதுரைநான்காஞ்சங்கநீடூழிநிகழுந்தானே. (௧)

இன்னதமிழ்ச்சங்கம்வளர்ந்தோங்கிவரநல்லுதவியென்றுஞ்செய்யு
நன்னர்மடபதிகள்புலவோர்மன்னர்வணிகர்செல்வர்நன்னூலாய்ந்து
சொன்னபடிநிவழக்குரையதிகாரிகளின்னுஞ்சொலநின்றோர்கண்
முன்னுலகிற்பெரும்புகழும்புண்ணியமுமெய்திநன்குவாழிவாழி. (௨)

தமிழ்ச்சங்கக் கலாசாலை உதவியுபாத்தியாயர்
சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடியது.

நேரிசைவெண்பா.

மன்னர்பலர் போற்று மதுரைத் தமிழ்ச்சங்கம்
என்னலமு மல்க வினிதருளுந்—தன்னந்
தனியாகியண்ட சராசரங்க டோறு
முனியாது வாழு முதல். (௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்ணிலவு முடிபதியைப் பகீரதியைச் சடைக்கணிந்த
விமலற் போற்றிப்
புண்ணியவைந் தெழுத்தோதிச் சைவநெறி முறையொழுகிப்
புலவோர்க் கெல்லாந்
தண்ணியவைந் தருமானத் தருபாண்டித் துரைமதுரை
தனிற்று பித்த
பண்ணியலுந் தமிழ்ச்சங்கம் பத்தொன்ப தாம்வயது
படைத்த தன்றே. (௨)

இவ்வருடத் திருநாட்குத் தலைவனென வினிதமர்ந்தா
னெழினெல் வேலித்
திவ்வியபொற் பதியுறைவோன் செந்தமிழு மாங்கிலமுந்
தெளிந்த மேலோன்
செவ்வியநீ தித்தலத்திற் றிகழ்நீதி வாதியெனச்
சிறந்த நல்லோன்
பவ்வநெடுந் துகிலுடுத்த பாருலகு புகழுமுயர்
பான்மை மிக்கோன். (௩)

மன்னவர்தங் குடிவளமு மற்றவர்தம் பொருள்வளமு
மாண்புற் றோங்கத்
தன்னுரிமைக் கொழுவளத்தாற் றருமேழிக் கொடியுடையோன்
றரும சீலன்

பன்னுதமிழ்ப் புலவோர்க்கும் பைந்தமிழ்க்கும் வழங்குகொடைப்
பாரி போல்வான்
சொன்னயமும் பொருணயமு முணர்சோம சுந்தரப்பேர்த்
தூயோ னம்மா. (௪)

இப்பெரியோன் றன்வரவு நல்வரவா குகவிவன்பே
ரென்றும் வாழ்க
வொப்பறுமிச் சபைவாழ்க தமிழ்ச்சங்கத் தலைவருட
னுவந்து வாழ்க
செப்பருநற் புகழ்படைத்த தென்மொழியும் வடமொழியுஞ்
சிறந்து வாழ்க
எப்பொருட்கு மிறைவனருட் பதம்வாழ்க வாழ்கபுவி
யென்று மாதோ. (௫)

செந்தமிழ்க்கோ ராகரமா மிச்சங்கம் புரந்தருள்வோன்
சேது வேந்தன்
விந்தையுறை மணிமார்பன் ராஜரா ஜேசுவரன்
வேந்தர் வேந்தர்
முந்துசபைக் கணியாகி முதன்மையுற் றிருப்போன்
முகிலை நேரச்
சந்ததம்பா வலர்ப்புரப்போன் றனதுபுகழ் நீடூழி
தழைக மாதோ. (௬)

பார்புகழு மாதிபுரப் பசுபதிதாண் மறவாதான்
பாடல் சான்ற
சீர்திகழு மிச்சங்கந் தனைக்காக்குஞ் சிறப்புமிகு
செல்வச் சீமான்
ஏர்திகழும் வணிகர்குல மணியனையான் பாவலருக்
கெழிலி போல்வான்
பேர்திகழும் பெத்தாச்சி வள்ளல்புகழ் தழைத்திடுக
பெரிது மாதோ. (எ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தென்னவர் மதுரை திகழ்தமிழ்ச் சங்கஞ்
சிறந்திடச் சிந்தையால் வாக்காற்
பன்னரு முடலாற் பலநல நினையப்
பலபல முயற்சிசெய் திடுவோர்

பொன்னிறி தருவோர் புத்தக மீவோர்
பொருள்பலர் கொடுத்திடப் புரிவோர்
இன்னவர் மரபு தழைத்தினி தோங்க
விறைஞ்சுது மெம்பிரான் பதமே. (௮)

## சக்கரவர்த்தி வாழ்த்து.

வையகத்தை யாளு மகாமண்ட லேச்சுரன்மெய்ச்
செய்யமுறை கோடாத செங்கோலான்—றுய்யனெழில்
ஐந்தாம்ஜார்ஜ் என்னு மரசர்பிரா னெஞ்ஞான்றும்
மைந்தார்ந்து வாழ்க மகிழ்ந்து. (௯)

---

மதுரை: சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்

P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள் இயற்றியது.

1. சேதுபதி யார்நலஞ்சேர் செந்தமிழ்ச் சங்கமிது
கோதுபதி யாப்புலவோர் கூட்டுறவால்—மாதுபதி
தந்ததமிழ் காத்துச் சருவகலா சாலையாய்ச்
சந்ததமும் வாழ்க தழைத்து.

2. பெருங்கதைப்பே ராசிரியன் முதற்புலவர் பெருமக்கள்
பிறங்குஞ் சீரால்
வரும்புலவர் மகிழ்வுறச்செய் மாண்புறுமிச் சங்கவிழா
மதுரை தன்னில்
பெருங்குணம் நல்லொழுக்கமணி சோமசுந்தரப் பெரியோன்
பெட்புற் றேற்ற
அருந்தலைமை யதன்கீழ்நன் கார்ந்ததிறை யருள்பெருகி
அவனி வாழி.

---

மதுரைத்தமிழ்ப்பண்டிதர்

N. கனகராஜையரவர்களியற்றியது.

புனற்சடையார் பரம்பரன்மெய்த் திருவருளாற் பொதியின்முனி
புரந்த செங்கட்
கனற்சுவைசேர் தமிழணங்கு கனிச்சுவையும் புனற்சுவையுங்
கண்டே மண்ணிற்

கனச்சுவையுங் காணவரு மிக்கால நற்காலங்
காத லோங்கித்
தனச்சுவைதேர் பொருள்வணிகர் மணச்சுவையாற் றுங்கவருந்
தன்மை கண்டீர். (௧)

வளமதுரை நகரில்வளர் தமிழ்ச்சங்கம் பத்தோன்பான்
வயதும் பெற்றுத்
தெளிநூர்பலர் நிறையவைபிற் சாறுகொள வீறுகொளுஞ்
சிறப்பு மோங்கி
உளமகிழ்வின் மிகுபுலவர் வாழ்த்தெடுக்கும் ஏத்திசைகோண்
டுயர்ந்த வாற்றால்
அளவின்மறை யறியாத விறைபவனு ரருள்பெறுதற்
கைய மின்றே. (௨)

அவைத்தலைமை யேற்றமைதி நிறைகோலி னடுநிலைமை
யருஞ்சொல் வன்மை
சிவைக்குரிய தலைவனிட முதிரன்பு பிறர்குறையைத்
தேராத் தூய்மை
நவைக்குரிய கயவர்சொலுஞ் செவியேற்று நன்மதியை
நல்குஞ் சீர்மை
இவைக்குரிய புகழ்ச்சோம சுந்தரவேள் எஞ்ஞான்றும்
இனிது வாழி. (௩)

வாழிமறை வேள்விமறை யவர்முதலா நாற்குலத்தில்
வாழு மாந்தர்
வாழிமழை முகில்சைவம் வைணவமே முதலாய
மதங்கள் வாழி
வாழிநிறை மொழிமாந்தர் மன்னவன்செங்கோல்வாழி
மதுரை வாழி
வாழிதமிழ்ச் சங்கமருந் தமிழ்ப்பயிரும் ஊழியுற
வாழி வாழி. (௪)

மதிப்புரை:—

I. குமுதவல்லி, திருமங்கை மன்னன்:—இது, திருமங்கையாழ்வார்வைபவத்தை, அழகிய தமிழ்நடையில் பெண்டிரும், பெரியோரும், சிறுவரும் படித்தானந்திக்கும்படி பல மேற்கோள்களுடன் தெளிவாக விளக்குவது. நாகைவித்வான் ஸ்ரீமத். ஜே. இராஜகோபாலபிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. நல்லகடிதத்தில், அச்சிடப்பட்டிருக்கிறது. கலாசாலை மாணவர்களுக்கு இப்புத்தகம் பாடமாக வைக்கப்பெறின், நல்லறிவும், தெய்வநம்பிக்கையும் விர்த்தியடையும். இதன்விலை அணா-8. வேண்டுவோர், "அமிர்தகவி-ஜெ. ராஜகோபாலபிள்ளையவர்கள், 86 பெருமாள்கோவில் தெற்குவீதி, நாகபட்டினம்" என்ற விலாசதார்க் கெழுதிப் பெறலாம்.

II. மனிததருமமும், துளசிமகத்துவமும்:—இதுவும் ஷை ஜெ. இராஜகோபாலபிள்ளையவர்களால் தமிழ்நடையில் எழுதப்பட்டது. இதில், பலகண்டங்களின் இயல்பும், அவற்றிற்பிறக்கும் மாந்தர், நடையுடை பாவனைகளாலும் நிறத்தாலும், ஒழுக்கமுதலியவைகளாலும் வேறுபட்டிருக்கக் காரணமும், ஒவ்வொரு மனிதனும் அவசியம் தெரிந்து நடந்து கொள்ளவேண்டிய முக்கியமான விதிவிலக்குகளும் கூறப்பட்டிருப்பதோடு, துளசிமகத்துவமும், வடநாட்டில் காட்டிலாகாஉத்தியோகம் வகித்திருந்தவரான ஷீல் என்ற ஆங்கிலகனவானுடைய அனுபவத்திற்கண்டறிந்தபடி வெளியிடப்பட்டிருக்கிறது. சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும்படி சிறுபுத்தகமாக நன்கு அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன் விலை விவரமுதலியன ஆக்கியோர்க் கெழுதித்தெரியலாம்.

III. யாக்ஞவல்கியம்:—இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரும், மதுரை, சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத். P. C புன்னைவனநாதமுதலியாரவர்களால், தமிழ்நடையில் ஆன்மபோதத்தை விளக்கி நன்கு எழுதப்பட்டுள்ளது; இது வடமொழியிலிருந்து வடநாட்டுத்தத்துவசால்

திரி ஒருவர் ஆங்கிலத்தில் எழுதிய "மைத்திரேயி" என்ற சிறுவேதாந்த கதையைத் தழுவியது. மாணவர்க்கும் பிறர்க்கும் தத்துவரகசியங்களை எளிதிற் புகட்டவல்லது. இதன் விலை அணா-9.

---

IV. செய்யுட்பாடக் கோவை:— (முதற்பாகம்) இது, ஸ்ரீமத். P. C. புன்னைவனநாதமுதலியாரவர்களால் தொகுக்கப்பெற்றது; கலாசாலை மாணவர்களுக்குபயோகமாகும்பொருட்டு மூதுரை முதலிய இருபது நூல்களிலிருந்து பொறுக்கியெடுத்த 507 செய்யுட்களையுடையது; I, II, III-ஆவது பாரமாணவர்களுக்குப் பாடமாகவைக்கத்தக்கது. கலாசாலையதிகாரிகள் இப்புத்தகத்தைப் பாடபுத்தகமாக ஏற்று முதலியாரவர்களுக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா-8.

---

V. நீதிசாரத்திரட்டு:—(முதற்பாகம்) இது, ஸ்ரீமத். P. C. புன்னைவனநாத முதலியாரவர்களால் செவ்விய தமிழ்நடையில் இயற்றப்பெற்றது; மாணவர்களின் அறிவை வளர்த்து ஒழுக்க வழக்கங்களைச் சீர்திருத்த வல்லது; ஆரம்பப்பள்ளிக்கூடங்களிற் பயிலும் மாணவர்க்கு நீதிபோதனைக்குரிய பாடமாக்வைக்கத்தக்கது. இதன் விலை அணா-4. இதுவும், மேலேகாட்டிய யாக்ஞவற்கியமும், செய்யுட்பாடக்கோவையும் மதுரை, புத்தகவியாபாரம், பி. நா. சிதம்பரமுதலியார் கம்பெனியில் விலைக்குப்பெறலாம்.

---

VI. ரோமியோஜூலியத்:—இது ஆங்கிலத்திற் கவிசிரேஷ்டராகிய ஷேக்ஸ்பியரால் செய்யப்பட்ட கதையைத்தழுவி, தமிழ்ச்செய்யுட்களால் ஆனைமலை ஸ்ரீமத் A. R. ஸ்ரீநிவாஸமுதலியாரவர்கள் இயற்றியது. செஞ்சொற்களால் எல்லார்க்கும் பொருள் எளிதில் விளங்கும்படி பாடப்பட்டது. மதுரை மாணவர்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமத். M. கோபாலகிருஷ்ணையரவர்களுக்கு உரிமை செய்யப்பட்டது. கதை ஆங்கிலப்போக்காயினும் இடையிடையே கற்பனைகளும், நீதிகளும், அலங்காரங்களும் தமிழ்முறையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா-8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப்பெறலாம்.

---

VII. அனுபவசோதிடரத்னம்:—இது அம்பாசமுத்திரம் தாலூகா பாப்பான்குளம் கிராமத்திலிருக்கும் சோதிடசாஸ்திரி ஸ்ரீமத். வி. ஆறுமுகமுதலியாரவர்களா லியற்றப்பட்டது. இதிற் சோதிடம் கற்க விரும்புவோரும் பிறரும் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை வருஷாதிநூல் முதலிய சோதிட நூல்களினின்றும் பொறுக்கியெடுத்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டியிருத்தலால் இது சோதிடவுணர்ச்சியை யெளிதிலுண்டாக்கத்தக்கது. இதன் விலை ரூ-1. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

---

VIII. காதம்பரி சங்கிரகம்:—இது, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்களால், பலமேற்கோள்களுடன் இனிய தமிழ் நடையில், சுருக்கி யெழுதப்பட்டது. கும்பகோணத்தை அடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. மாணவர்களுக்குத் தமிழ் நடை யெழுதும் திறத்தை உண்டாக்கவல்லது. இதன் விலை அணா-5. வேண்டுவோர் கும்பகோணத்தையடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தார்க் கெழுதிப்பெறலாம்.

---

IX. முயற்சி திருவினையாக்கும்:—இது ஷை ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்களால் "முயற்சி திருவினையாக்கும்" என்ற குறட்பகுதியை, கௌசிகர் சரிதமுகத்தான் விளக்கி யெழுதப்பட்ட ஒரு சிறு வசன புத்தகமாம். இது வியாசமெழுதும் கலாசாலை மாணவர்களுக்கு உபயோகப்படத்தக்கது. ஷை கலைமகள் கல்விக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதன் விலை அணா ஒன்றரை. வேண்டுவோர் கும்பகோணத்தை அடுத்த கல்லூர்க் கலைமகள்கல்விக்கழகத்தார்க் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

---

## தனிநிலைச்செய்யுட்கோவை.

(கரு௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

38. ஆங்கிலப் பனுவற் கழகத் தவரே
பாங்கின ரம்மொழிப் பயிற்சிதெளி பண்பிற்
கதாஅன்று,
செந்தமிழ்ப் பயிற்சி தெளிதற் கவரை
முந்துபு போற்றினர் முத்தமிழ் காட்டினர்
கூடற் கூடிய கொழுஞ்சுவைச் செழுந்தமிழ்ப்
பாடல்சால் கூட்டமும் பார்வாழ் புலவரைத்
தாட்கீழ்ப் படுத்துந் தகைமை சான்றவர்,
வெரிநொடு வயிற்றிடை வேற்றுமை பெறப்படார்
புரைவெண் ணறுவையர் புயல்பனி வெயிலாற்
றிரிவுறு மேனியர் பேணுநர்ச் சிறிதிலர்
புன்னூ லாயும் பான்மையர் பாந்த
நன்னூற் கேள்வியர் நாவலர் பாவலர்
பொன்னேர் தங்கோள் புவிகாட்டு மாற்றலர்
திருந்தெழில் குலந்திகழ் சேயிழை
யருந்துணை யிழந்தாங் காற்றிடப் படுத்தே.

39. வயிற்றுப்பசி மாற்றி மெய்ந்நலன் வளர்த்த
லயிலுணத் தன்மை யாதன் மான
வுயிர்ப்பசி யொரீஇ யுயிரை யோம்புதல்
கடவுள் வாழ்த்திற் கண்டமுறை யாகு
மாபுவழி வந்த வுணவே பல்வவ
ருடல வளர்ச்சிக் குரியன வாகுங்
கடவுள் வணக்கமக் காட்சியி னமையு
மொருபா லார்மற் றொருபா லார்தம்
முணவு முதல வுவர்த்தலிற் கடவுள்
வாழ்த்தையும் வரைகுநர் மற்றிறை யுண்மை
யுடம்பாட் டவரோ டுறழ்தலொன் றின்று
முடம்பா டன்றே யொன்னு ராவர்

அதாஅன்று,
பலகோள் படைத்த பற்பலர் தம்மையுஞ்
செய்ந்நன்றி கொன்ற வில்லையென் போரையு
மறந்தரு சால்பி னான்றோர் தம்மையு
மறந்தரு பழிவளர் வன்கண் ணோரையுங்
காத்தல் புரிதல் கடவுட் கியற்கைநா
மீத்தரு செயல்செய வேட்டன்மட னன்றே
யாதலி னவன்றாட் கடியோந்
தீதறு மவன்செயல் சிதைத்தனல னன்றே.

40. பஃறலை யுடையை பலகை யுடையை
நீயென் றொருவனை நிகழ்த்தன்மட னென்றுதம்
புதுமை கொண்டுநம் பழமைநனி யெள்ளுநர்
நாற்கை மெய்ப்பை நலனென மிக்கோர்
மேற்கொண் டிழுக்குநர் நாமே விழைவுடன்
கல்லினும் பல்வகைப் பொன்னினுங் கடவுளை
நல்வடி வமைத்து நன்றிகொடு பாவுதல்
பொல்லாங் கென்னப் புறம்பழித் தாற்றுநர்
தம்முறு வேந்தன் றன்றிரு நாளி
னவன்வடி வமைந்த வழகோ வியத்தைப்
பட்டுடை யுடுத்திப் பைந்தார் சூட்டி
யூர்தியி னேற்றி யூர்வலம் வருகுநர்
இறையுண் டென்ற வறிவு கொளுத்திய
முறையா சானையு மங்ஙன முயல்குநர்
தன்னுறு வெரிநுந் தன்மனை
துன்னுபழி முதலவுந் தோன்றாமை நெறியே.

41. எருமை முழுப்பொரு ளியையு மெனினே
யுரிமையொடு சென்றாங் குவந்து தலை வணங்கி
யருமைப் பனுவலை யதன்கைப் படுத்திச்
சிறிது பொருள் கொண்டு திரும்புந ரன்றி
நல்லறி வுடையோ னற்றமிழ்ப் பாவலன்
வறிஞ னுரைகோ ளாளன் வாய்மையன்
வழிபடு தகைய னிவனே யென்றவற்

கொன்றுத வாற்றல் புலவோர்க் கில்லெனி
ஞற்றுந ரச்சிற் போற்றிய பனுவலைப்
பொருள்கொடுத் தேற்றுப் புரைகொளா தவற்றை
யருள்வழி யளித்தற் காஞ்செல் வோரெலா
மிருள்வழி மருளுற் றிறந்தன ரேயோ
செந்தமிழ்க் கழகந் திருத்தற் கொருப்படார்
நிறைபொருள் பிறமொழி நிலவுற நீட்டுவர்
இவரே தமிழர் இவரே செல்வர்
இவரே யறிஞர் இவரே பெரியர்
இவரே யறவோர் இவரே குலத்தினர்
இனியே,
தொட்டுழி யெல்லா மினிமை சுரப்பன
நோக்குழி யெல்லா நுண்மை சான்றன
துளக்க கில்லாத் துணிபொருண் முற்றின
வளக்க வொண்ணா வளவு நிறைந்தன
பண்டைச் சான்றோர் பாலித்த மும்மைத்
தண்டமிழ்ப் பனுவலைத் தம்பொரு ளென்னப்
போற்றா தழித்தோர்க்குப் பொருளுந் நிலையுமே
அவற்றை யெல்லா மவாவி யாயாத
தமிழர்க் காக்கக் கேடுபிறி துண்டே
யுண்மை கூறி னுலகமு வர்க்கு
நன்றுநன் றம்மா நன்றே
யொன்றிய தமிழ்நாட் டுடைமை மிகநன்றே.

42. ஐம்புலன் வேட்பன வவாவி யீட்டியும்
வெம்மனப் பேய்க்கு விருப்புநிறை கிலராய்
தம்மறிவு கலங்கித் தாமாய்ந் தோரைக்
கண்ட காட்சியர் புலக்குத வடைத்து
மெய்ப்பற்று விட்டுச், சாந்துயர்க் குளதா
மெய்ப்பற் றின்பத் திடைமூழ் கினரே
மேய கடவுளை விளக்குநெறி முற்று
மீயுமுயர் நூலு ளியைந்தன வற்றைத்
தோயு முதுப்பின் றேற்ற நாட்டிக்

கோயில் படைத்துக் குலவுமர் நாவிரு
மேற்றங் காட்டி யிறவாது போற்றினர்
தமிழர் தம்முள் வறுமையுழக் காறு
துன்னும் பிறவுந் தோன்றல ராதற்
காங்கக் கோயிற் களவின் னிலம்பொருள்
செவ்விதி னமைத்துச் சிறப்புற் றமர்ந்தன
ரிவ்வகை யறியா வேழையர் தம்மு
ளொருசா ராரே கோயினிலை யுணர்கிலர்
மற்றொரு சாரார் கோயிற் பொருள் கொடு
முத்தமிழ் வளர்க்கிலர் மூதறி வுடைய
வித்தகப் பாவலர் விழுப்பத்து நாவலர்
தங்கட்குச் சிறிதுந் தருகில ராகிப்
பல்லிய மியம்பும் பாவோர் தமக்குங்
கூத்தர் தமக்குங் கூத்தியர் தமக்குங்
கொடுத்துக் கோயிலொடு நங்குலங் கெடுக்குநர்
வெளிற்றுக் கோயிலொடு விராவுதங் கொள்கையு
மளப்பில் கழகமு மமைத்துச் செழிக்குந்
தன்மைய ராகு மேனாட்டுச் சார்பினர்த்
துன்னுவ வெல்லாந் தூய்தாக் கொள்ளுந
ரின்னவை களைகலா தென்னோ விருக்குநர்
கோயிற்றொறுங் கோயிற்றொறுங் கூட்டற் கெழீஇய
தாயமர் தமிழைத் தலைமைகொடு நம்மனோர்
பற்பல வாகப் பயின்று
பொற்பமை நல்வழிப் போகுநிலை யொழித்தே.

43. முந்தை ஞான்று மூதறி வுடைய
நவல்வோ ரெல்லாஞ் சிறுபொழுது நவலக்
கேட்போ ரெல்லாங் கேண்மைகொ டந்நாண்
முழுதும் பயின்றனர் முறைமையுற் றனரே
தன்னடி யார்க்குத் தக்கபணி நாலேழ்
நாழிகை வரையி னவின்றநவின் றேவ
வன்னோ னவற்றை யரைநொடிப் பொழுதின்
முற்றுவித் தாங்கு நவல்வோர் பலரே

சுற்றிச் சுற்றி ருவன்றன வெல்லா
மிற்றைஞான் றம்மா கேட்குநர் கொடியிற்
கற்றுத் தேர்குநர் காட்டினன் றம்மா
அதான்று,
கழகத்தை நாடி வருதற்கு மாங்கு
வீட்டை நாடி விரைதற்கும் வினவிடை
கூட்டி யுரைத்துக் கொள்கை முற்றற
காட்டுதற்கு நுண்ணறிவு மகாஅர்க்குப்
பூனை யென்பதைப் பூனைவிழிக் காட்டிச்
சொல்லறி வித்துச் சொல்லைப் பிரித்தாங்
கெழுத்தறி வித்த லெவனோ பயக்கு
முயிரீரா றுமெய்ம் மூவா றும்
பன்னிரு பதினெட் டென்னுமுயிர் மெய்யுஞ்
சின்னாட் பயின்று தெளிந்த பிறர்க்கே
யென்னு மொன்றை யியம்புவீ ராயி
னன்னவை தம்மை நீவிர்நன் குணர்ந்த
வெழுத்துட் காட்டுது மென்ற வினவிற்
கிறுத்த சொல்லைப் படிப்படி யாக
விரைவு குறைத்து விளக்கிற் செவ்வே
யெழுத்துப் புலனாகி யியங்குவ ரம்மா
யானை யெருத்தம் பொலிய வென்றதை
யானை யெருது பொலியவென் றுணர்ந்த
அத்தகை யவரே யன்னர்
முத்தை மரபுவரு முறைதபுக் குநரே.

44. பொல்லா மண்ணசைஇப் பொருகுநர் தம்முட்
பல்லோர் செத்தும் பல்லோர் பெரும்புண்
கொண்டு நலிந்தும் குன்றுநர் குற்றங்
கண்டுபுரி திறலிலர் கருது சிறை கொலை
யண்டினர் தமக்காங் கஞ்சில ரளிக்குந
ரியம்புவ நெறியோ டின்றியமை யாத
வயின வெனினு முன்முறைக் கயலெனிற்
றலையுங் களைகுவர் சாற்றுமித் தலையெலா

நிலையுநல் லன்பு நிகழ்த்தற் கயர்ந்தனர்
இனியே,
குழவி யென்றுங் கிழவோ னென்று
மழிவிழவு முதல வளித்தில னிறைவ
முழுதுநல னீந்தே முழங்குந னம்மா
விவற்று னுலகோ ரொறுப்பிற் கஞ்சித்
தவற்றிடை யொரீஇத் தாமுய் குவவே
இனியே,
கற்போன் கற்பினிற் காண்டகு செயலிற்
குற்றம் காணுழிக் குறிக்கொண் டொறுக்கிலா
தற்புக் காட்டி ஞசுற் றழிவுறாஉ
மாதலி னுவல்வோ னன்பார் தன்மையுந்
தீதறு வெம்மையுந் திறப்படத் தெளிந்து
போற்றுத னலனுப் புகன்றன
ராற்றறவ ழறிவுடை யான்றோர் பலரே.

45. கற்போர் தம்மைக் காதணி முதல
பொற்பா வணிகிலிர் புனைமி னெனவு
நற்சுவை யுணவை நன்கருந் திலிரே
யற்புட னருந்துமி னருந்துமி னெனவும்
ஒள்ளிய வாடை யுடுத்திலி ரெனவும்
வற்புறுத் திடித்து வைதற்கு மகிழ்வ
ரிவ்வே மான வுயிர்வளர்ப் பியற்றிச்
செவ்வே யணிதருஞ் சீர்த்த கற்பினை
யாற்றுமை பெரிதே யாசாகு மென்ற
கூற்றுச்செவிக் கொள்ளிற் கொடுமைகொடு குன்றுவர்
கூலிபெறு வினைஞன் றன்னொடு கூடிச்
சாலவினை தவிர்க்குந் தலைவனை நோக்கி

யிவ்வகை நீயே யியற்றுதி மடனென
வடியோ னுரையு மகங்கொளாத் தலைவற்குப்
படிநேர் பமைந்தனிர் பனுவற் கேட்பீர்
உம்பொரு ளெமக்கீண் டுவகையுற் றுதவினிர்
எம்பயிற் றிறையு மேலா தாடுதல்
பெரிதுந் தவறெனப் பேசினு மம்மா
திரிபுறு கின்றனர் செய்வ தெவன்சொல்
இவரே,
ஆசான் பொருளொன்று மடைதல் பழியெனத்
தேசார் கல்வியுங் கொள்கிலர் செவியிடைப்
பிரம்பினை யெடுக்கிற் பிறரே
வரம்பின்றி யேதம் வாய்க்குமென் குநரே.

46. ஏழ்வகை யிசையினக் கேற்பத் தனித்தனி
வாழ்தளை தம்மு ளொன்றின்மற் றொன்றிற்
சூழிசை துவைத்துச் சுவைதொலைச் சிடும்புன்
யாழிற் கேட்போர் தம்மு ளொருவரை
வினவுழிப் பிறரே விரைந்துவிடை யிறுக்குநர்
மூவ்வகைப் பண்பின் மூடமுக் கறிவினர்
எவ்வகை யொன்றினைச் சுருக்கிமனத் தியைக்கவு
மியைத்த வற்றை யினிதுவிரித் தியம்பவுங்
கூடு மிவற்றைக் குறிக்கொடு சான்றோர்
நாடும் பாவுரை நயந்தாய்ந்து நல்கின
ரிவ்வறி யாரே யியைந்தாங்குச் சுருக்கி
யொவ்வுளத் தூன்றவு மூறின்றி விரிக்கவுந்
தலைப்பட்டு வீணே தம்பயன் கெடுக்குநர்
நிலைப்பட்ட நெஞ்சி னிறைதமி ழியற்கைப்
புலவர் பாடல் பொருந்திசி னோரே

# செந்தமிழ்

நிலவுநர் மற்றெவர் நிலைபெற் றனரே
தந்தலை மதித்துத் தருக்கொடு செருக்கிய
வெத்துணைச் செல்வ ரிருந்துமறைந் தன்றே
பந்தணி னொடிகை யதற்குமின் றாகப்
புலையன் கையை மருத்துவன் பொருத்த
வக்கை கொடுத்தனக் கர்வன செய்குநன்
இழிவுள் ளனவு மேற்றமுள் ளனவு
மாயபல் லுறுப்பு நமக்கமை வனபோற்
றாய முழுமுதற் றொல்லோன் றனக்கு
மேயின வுறுப்பென வியம்பார் முதல
வவ்வப் பொறிவழி யேற்றன வளித்தற்குச்
செவ்வைச் சேர்தலுர் திறஞ்சிந்தைத் தளித்தற்குத்
தெவ்வமை வெறுப்புச் சேர்தலு மனன்பெறு
மொருவற் சார்தற் குளவழிச் செல்கைக்
குவட்டும் பிறவழிக் குவர்ப்பு மொன்றுவர்
ஈண்டிய வினைபோ லெண்ணில் செய்கை
யீண்டிமண் டின்பமென் றிணைந்திணைத்
தாண்டாண் டலைந்தய ரவனிக் கியற்கையே.

தொடரும்.

S. வைரமுத்து.